# உலக மயமாதலில் ஓவியக்கலை எதிர்கொள்ளும் சவால்கள் இலங்கையின் 20ஆம் நூற்றாண்டு ஓவியக்கலையினூடான ஒரு பார்வை

ர. பிரகாஷ்

**ஆய்வுச்சுருக்கம் :**

இலங்கையின் 20ம் நூற்றாண்டில் கலை வடிவங்கள்யாவும் தமது பாரம்பரிய கலை மரபுகளில் இருந்து விடுபட்டு புதிய கலை மரபுகளிற்குள் ஊடுருவிச் செல்கின்றன. இங்கு ஓவியக்கலையானது புதிய கோணங்களை நாடிச் செல்லும், ஆக்கபூர்வ உணர்வு வெளிப்பாடுகளைக் கொண்டமைந்த, ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்கும் படைப்புக்களாக வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த நவீன கலை வரவுகளை ஊக்கப்படுத்தும் செயற்பாட்டினை உலகமயமாதலின் பின்னணியில் அவதானிக்க முடியும். இதனை இலங்கையில் மாறுபட்ட முறைகளில் அமைந்த ஓவியக்கலைப்படைப்புக்களின் வெளிப்பாடுகளின் ஊடாக இனங்காண முடியும். இலங்கையின் 20ம் நூற்றாண்டு ஓவியக்கலை ,கட்டுப்பாடுகளற்ற ஓவியப்பரப்பு விஸ்தீரணத்தின் உருவாக்கத்தில் தோன்றுவதற்கு, உலகமயமாதலின் செயற்பாடுகளே முக்கிய காரணியாக விளங்குகின்றமையை இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் சுட்டிக்காட்ட முடியும்.

**திறவுச்சொற்கள் :**

1. பாரம்பரிய ஓவியம் (Traditional Art)
2. நவீன ஓவியம் (Modern Art)
3. காலனித்துவம் (Colonialism)
4. மேற்கத்தேய நாகரீகம் (Occident culture)
5. சமஸ்கிருதய மயமாக்கல் (Sanskritization)
6. தகர்ப்பு வாதம் (Deconstruction)
7. கட்புல பண்மைத்துவம் (Visual pluralism)

**அறிமுகம்**

சம காலத்தில் உலகமயமாதலின் காரண மாக கலைஇ கலாச்சாரம்இபண்பாடு முதலி யவற்றின் பாரம்பரியங்கள் யாவும் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. கலை வடிவங்கள் பாரம்பரிய மரபுகள் மற்றும் சாஸ்த்திரிய வரையறைகளுக்கு அப்பால் கற்பனைகளைச் சிதறடித்துப் பறக்கச் செய்யும் புதிய கோணங்களில் வளர்ச்சி கண்டுள்ளமைக்கு பிரதான காரணியாக இந்த உலகமயமாதல் விளங்குகின்றது. இலங் கையில் இசை, நடனம் , நாடகம் , ஓவியம் முதலிய பல கலை வடிவங்களிலும் உலகம யமாதலின் தாக்கங்களின் ஊடாக புதிய சாதனைகளை கலைவடிவங்களினூடாக இனங்கண்டு கொள்ள முடியும். குறிப்பாக இலங்கையின் ஓவியக்கலை வரலாற்றில் புதிய எல்லைகளை ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது. பாரம்பரிய முறை, நவீன முறை என இரண்டு பிரிவாக ஓவியக் கலையைப் பிரித்து நோக்க முடியும். 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பாரம்பரிய ஓவிய மரபுகள் முற்றாக தகர்க்கப்பட்டு நவீன ஓவிய மரபுகள் உள்வாங்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த மாற்றத்திற்கு,

1. காலனித்துவம் (Colonialism)
2. மேற்கத்தேய நாகரீகம் (Occident culture)
3. சமஸ்கிருதய மயமாக்கல் (Samskritisatim)
4. தகர்ப்பு வாதம் (Deconstruction)
5. கட்புல பன்மைத்துவம் (Visual pluralism)

முதலிய பல்வேறு காரணிகள் கலைவடிவங்களில் செல்வாக்கு செலுத்துகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

**உலகமயமாதல்**

இனம், மதம் இ மொழி, பொருளாதாரம் முதலிய அடிப்படையில் தேசம் முக்கியம் பெறுகின்றது. வரலாற்று ரீதியாக நோக்கும் போது தேசங்களுக்கு இப்பொழுது அதிகாரம் இல்லாமல் இருக்கின்றமையை சுட்டிக்காட்ட முடியும். மேற்கத்தேய வல்லரசு நாடுகள் எமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் காலனித்துவ ஆட்சி செய்தன. அத்துடன் அவ் ஐரோப்பிய நாட்டவர்கள் தேசியம் என்றால் என்ன என்பதனையும் கொண்டு வந்தனர். சுதந்திரம் அடைந்த பின் நவகாலனித்துவம் மறைமுகமாக அனைத்து விடயங்களிலும் ஊடுருவி வளர்ச்சி அடைந்தது. தேசத்திற்கு சுதந்திரமும் தன்னாதிக்கமும் முக்கிய தேவையாக இருந்தது. இதனை பன்னாட்டு நிறுவனங்களின் பணம் தீர்மானிக்கத் தொடங்கின எனலாம். பன்னாட்டு நிறுவனங்கள் வந்தவுடன் தேசம் என்பது இல்லாமல் போய்விட்டது. உலகமயமாக்கம் வந்தது. அடிப்படைரீதியாக நோக்கும் போது உலகத்தை முழுமையாகப் பார்த்தல், கைத்தொழில் புரட்சி, சுற்று சூழல் சார்ந்த விடயங்கள் முதலியன முக்கியம் பெற்று விளங்கின. மனித நாகரிக அடிப்படை ரீதியில் கிராம வாழ்க்கை முறையில் இருந்து நகர வாழ்க்கை முறைக்கு மாற்றமடைதல், வாழ்க்கை முறை மாற்றங்கள், கைத்தொழில் புரட்சி காரணமாக நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, புகைப்படக் கருவிகளின் வருகை, தொலைத் தொடர்பு புரட்சி, தேசம் கடந்த பிரச்சினைகள் (பால், சமத்துவம், பெண்ணியம்) முதலியன இங்கு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தன எனலாம். பல பண்பாடுகள் சிதறடிக்கப்பட்ட ஓர் புதிய பண்பாட்டு நிலமையில் நாம் இருக்கின்றோம். சர்வதேச ரீதியான வாழ்க்கை முறை, பண்பாட்டு பன்மைத்துவம், கலைப்படைப்புக்கள் ரீதியான பரிவர்த்தனை முதலிய பலவிடயங்களை இங்கு சுட்டிக்காட்ட முடியும். உலகமயமாதலின் காரணமாக மனிதர்களது கலைப்படைப்புக்களிலும் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமையை இனங்காணமுடியும். அந்த வகையில் ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளிலும் பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வந்த மரபுகள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ஓவியக்கலை**

ஓவியக்கலையை வரலாற்று ரீதியாக நோக்கும் போது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் குகை ஓவியங்களாகவும் பின்னர் சுவர் ஓவியங்களாகவும், கோயில், அரண்மனை ஓவியங்களாக பல வழிகளில் காலத்திற்கு காலம் பரிணாம வளர்ச்சி அடைந்து வந்தவள்ளமையைக் காண முடிகின்றது. இவ் வரலாற்று ரீதியான ஓவிய வளர்ச்சி மறுமலர்ச்சிக் காலத்தில் கைத்தொழில் புரட்சியின் காரணமாக புகைப்படக் கருவியின் கண்டுபிடிப்பானது உண்மை அழகை தூரிகை, வர்ணம் மூலம் கண்ட உலகிற்கு திடீரென ஓர் மாற்றத்தை உண்டாக்கியது. ஒன்றைப் பிரதி பண்ணுவதை புகைப்படக் கருவி செய்தமையால் பார்த்ததைக்கொண்டு யாரும் பார்க்காதவற்றை படைக்க வேண்டும் என்ற நிலையில் ஓவியம் புதிய நுட்ப வழிமுறைகள், புதிய சிந்தனைகள், புதிய ஆராய்ச்சிகள் ஊடாக புதிய பரிணாம வளர்ச்சி கண்டது. தொன்று தொட்டு இருந்து வந்த ஓவிய மரபு முறை தகர்க்கப்பட்டு புதிய வடிவில் நவீன ஓவியம் தோன்ற வழிகோலியது. ஓவியம் பாரம்பரிய

ஓவியம், நவீன ஓவியம் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. இவ் இரண்டு முறைகளினூடாக பல்வேறு விதமான ஓவியப்படைப்புக்கள் படைக்கப்பட்டன. கருப்பொருள் ரீதியாகவும், ஊடக ரீதியாகவும், பல புதிய சிந்தனைகள் ஊடாகவும் சமூக வாழ்க்கைப் பிரச்சினைகள் கிராமம், நகரம் சார்ந்த பிரச்சினைகள், உள்நாட்டு யுத்தம் சார்ந்த வெளிப்பாடுகள், பால் சமத்துவம் முதலான ஓவியப்பரப்பின் விஸ்தீரணத்தை இங்கு ஆராய்ந்து நோக்க முடியும்.

**இலங்கையில் ஓவியக்கலை**

இலங்கையில் ஓவியக்கலை வரலாறானது வரலாற்றுக்கு முற்பட்ட காலம், அநுராதபுரம், சிகிரியா, பொலநறுவை, தம்பதெனியா, கோட்டை, கம்பளை, கண்டி முதலிய இராசதானிகள் ஊடான ஓர் பாரம்பரியத்தைக் கொண்டமைந்துள்ளது. பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலான ஐரோப்பிய காலணித்துவ ஆட்சிக்காலத்திலேயே இலங்கைக்கான பாரம்பரிய மரபு உடைக்கப்பட்டு புதிய சிக்கலான புலமை சார்ந்த பல ஓவியப்பாணிகள் உள்வாங்கப் பட்டன. இங்கு 20ஆம் நூற்றாண்டில்இலங்கை ஓவியக்கலை உள்ளூர் வரலாற்றுடனும் பாரம்பரியங்களுடனும்மற்றும்மேலைத்தேயக் கலைமரபுகளுடனும் தொடர்புடையதாகவே காணப்படு கின்றது. இந்த மாற்றத்தினை, இலங்கை ஓவியக்கலைஞர்கள் தமது ஓவியப்படைப்புக்களில் மேலைத்தேய ஓவியப்பாணிகளைப் பின்பற்றிய மரபுகளினூடாக இனங் காணமுடியும். ஆனால் ஓவியக்கருப்பொருள் உள்ளூர் கலைப்பாரம்பரியங்களின் வெளிப்பாடகவே அமைந்திருக்கின்றது. மதம், சமூக விழிப்புணர்வு, சூழல் பிரச்சினைகள், பால் ,சமத்துவம், உள்ளூர் போர் முதலியன இங்கு பிரதான கருப்பொருளாக அமைந்துள்ளன.

ஓவியர்கள் இந்த கருப்பொருள்களை மையமாக வைத்து மேற்கத்தேய பாணிகளின் பின்னணியில் தமது ஓவியப்படைப்புக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த ஓவியங்களில், பாரம்பரிய முறை பின்பற்றப்படாமல் நவீன முறையில் ஓவியங்கள் மாற்றம் பெறுகின்றமைக்கு காலணித்துவ ஆட்சி முறை பிரதானமான காரணியாக காணப்படுகின்றது. எமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் மேற்கத்தேய வல்லரசு நாடுகள் எமது நாட்டில் காலணித்துவ ஆட்சி செய்தன. இவ்வாறு ஆட்சி புரிந்த மேலை நாட்டவர்கள் எமது நாட்டின் சூழல், இயற்கை வளங்கள் முதலியவற்றை தமது ஓவியப்பாணிகளில் நீர்வர்ண ஊடகங்களின் மூலம் ஓவியங்களை வரைந்துள்ளனர். அந்த காலகட்டத்தில் இலங்கைக்கு வந்த முதலாவது தொழில்சார்ந்த ஓவியர் ஐரிஸ் இனத்தைச் சேர்ந்த அண்ட்று நிகொல்(1804-1886) எனும் மேலைத்தேய ஓவியராவார்(ஜெகத் வீரசிங்க, 2005,.03).



Figure 01, Van Dort,J,L,K.,1888, Duch Temple, water colour(Online image),Available from:https://www.van-dort.org

அந்தக் காலத்தில் நீர்வர்ண ஊடகமானது இங்கிலாந்து றோயல் அக்கடமி ஊடாக

பிரபல்யம் அடைந்த ஊடகமாக விளங்கியுள்ளது. (Figure 01) மேலைத்தேய பாணிகளில் நீர்வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தி நிலக்காட்சி சித்தரிப்புக்கள் இயற்கையான தாவரங்கள் முதலியனவற்றை வரைந்த முதலாவது ஓவியராக (Jhon Leonhard Kalenbery Vondort, 1831) விளங்குகின்றார் என பேராசிரியர் ஜெகத் வீரசிங்க இலங்கையில் காண்பியக் கலை 20ஆம் நூற்றாண்டு எனும் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் அவர் 1832 ல் தென்னிந்தியாவின் பாண்டிச்சேரியில் இருந்து இலங்கைக்கு வந்த பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த ஹிபொலைட் சில்வர்ப் (Hppoliyte Sylavf 1801-1879) இலங்கையில் ஓவியக்கலை பாடசாலை ஒன்றினை நடாத்தியுள்ளார் என்றும் புறக்கோட்டைப் பகுதியில் ஏழுற்கு மேற்பட்ட ஓவியப் பாடசாலைகள் இருந்தன என்றும் 1880 இல் கொழும்பு ஓவியக்கழகம் (Colombo Drawing Club) ஒன்று இயங்கியதாகவும் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் அனுராதபுர காலம் தொடக்கம் கண்டி நகர் வரையான காலப்பகுதிகளின் கட்புலக்கலை வெளிப்பாடுகளில், இந்தியாவின் காண்பியக்கலை மரபுகளும் இலங்கைக்கான பௌத்த ஓவியப் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் ஓவியப் படைப்புக்களை இனங்கண்டு கொள்ள முடியும். 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளின் பௌத்த விகாரைகளில் மேலைத்தேய ஓவியமரபுகள் உள்வாங்கப்படுகின்றமையை இங்கு அவதானிக்க முடிகின்றது. பௌத்த பாரம்பரிய ஓவியங்களின் பாணிகளில் முப்பரிமாணத் தன்மை, மேலைத்தேய அலங்கார வடிவங்கள் முதலியன இங்கு முக்கியம் பெறுகின்றன.

இங்கு குறிப்பாக ஓவியக்கலை வெளிப்பாடுகளில் சமஸ்கிருதமயமாக்கல் முக்கியம் பெறுகின்றது. அதாவது உயர்குடி மக்கள் பின்பற்றிய மரபுகளை மற்றவர்களும் பின்பற்றுவதனால் உயர்குடி வர்க்கத்தின் மட்டத்திற்கு சமனான அந்தஸ்தை அவர்களும் பெறலாம் என்ற நிலை உருவாகியது. இதனை இலங்கை ஓவியக் கலைஞர்களின் படைப்புக்களில் இனங்கண்டு கொள்ள முடியும். குறிப்பாக மேலைத்தேய ஓவிய மரபுகளை இலங்கையில், காலணித்துவ ஆட்சிகாலத்தில் கண்டி நம் நாட்டு ஓவியர்கள் தமது படைப்புக்களில் மேலைத்தேய மரபுகளை பின்பற்றி வெளிக் கொண்டு வந்ததன் மூலம் மேலைத்தேயத்திற்கு நிகரான ஓர் நிலையை அடைந்துள்ளதனை அவதானிக்க முடியும்.



Figure 02, Mudaliyar marasekera,A,C,G,S.,1936, Devil Dancer's Daughter, oil on canvas,(Online image),Available from:https://archives.sundayobserver.lk/2009/08/09/mon15.osp

இவற்றினை 19ம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் முதலியார் A.C.G.S. அமரசேகர, முதலியார் டியுடர்ராஜபக்ஷ போன்றவர்களின் ஓவியப் படைப்புக்களில் இனங்கண்டு கொள்ள முடியும் (Figure 02). பிரித்தானிய அக்கடமி ஓவியக்கலை மரபின் மீது ஆர்வம் கொண்ட இலங்கை ஓவியர்கள் ஆங்கிலேயருடைய காலணித்துவ ஆட்சிக் காலத்திலேயே அவர்களின் அனுமதியுடன் 1891 ல் இலங்கைக்

கலைச் சங்கம் (Ceylon Society of Art) ஒன்றினை கொழும்பு நகரப்பகுதியில் ஸ்தாபித்தனர். (Goonetileka, L.P., 1968, p.61)

இலங்கையின் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் கட்புலக் கலை வெளிப் பாடானது அதன் பாரம்பரியமான மரபுகள் பண்புகள் முதலியனவற்றில் இருந்து முற்றாக மாற்றமடையத் தொடங்கிய காலப்பகுதி யாக காணப்பட்டுகின்றது. இதில் குறிப் பாக தகர்பு வாத கருத்துக்கள் பிரதான இடத்தினை வகிக்கின்றது எனலாம். அதாவது ஓவியக் கலைகளில் புராதன காலமாக தொன்று தொட்டு இருந்து வரும் பாரம்பரிய மற்றும் சாஸ்த்திரிய மரபுகள் உடைக்கப்பட்டு புதிய கலை மரபுகள் உள்வாங்கப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இதனை J.D.A.பெரேரா, டேவிட் பெயின்டர் முதலிய இலங்கை ஓவியக்கலைஞர்களின் படைப்புக்களில் மேலைத்தேய ஓவிய மரபுகள் உள்நுழைவதனை இனங்காண முடியும்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை ஓவியக்கலை வரலாற்றில் மறுமலர்ச்சி அடைந்த காலமாக இனங்காணப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக இலங்கையில் ஓவியக்கலைக் கழகங்கள் மற்றும் ஓவியக் குழுக்களில் சிங்கள, தமிழ் ஓவியர்களின் படைப்புக்கள் முக்கியம் பெறுகின்றன. 1938ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வின்ஸர் ஓவியக்கழகம், 1943ஆம் ஆண்டில் தோன்றிய 43ஆம் குழு, 1959 இல் விடுமுறைக்கால ஓவியக் கழகம் முதலியன இலங்கை ஓவியக்கலை வரலாற்றில் மிக முக்கியமான பங்களிப்பினை செய்துள்ளன. யாழ்ப்பாண ஓவியர்களின் முன்னோடியாக திகழ்ந்த S.R.கனகசபை அவர்களால் 1938ஆம் ஆண்டில் வின்ஸர் ஓவியக்கழகம் எனும் ஓவியப்பயிற்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண சிரேஷ்ட ஓவியர்கள் அனைவரும் இணைந்து மேலைத்தேய ஓவிய மரபுகளை தமது படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இதில் குறிப்பாக S.R.கனகசபையின் இருட்டடிப்பு எனும் ஓவியத்தில் மேலைத்தேய தாக்கத்தினை இனங்காண முடியும். அத்துடன் 1943ஆம் ஆண்டில் தோன்றிய 43ஆம் குழுவில் ஸ்டான்லி அபேசிங்கஇ திஸ்ஸ ரணசிங்க, ஜோர்ஜ் கீற், J.D.A.பெரெரா, டேவிட் பெயின்டர், H.A.கருணாரட்ன முதலிய இலங்கையின் பிரபல்யமான ஓவியர்கள் முக்கியமான இடத்தினை வகிக்கின்றனர் (Ellen Dissanayake,1986,p64). இங்கு தமிழ் ஓவியரான S.R.கனகசபையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலைத்தேய நவீன ஓவியக்கலையை தேசிய மற்றும் ஆசிய வெளிப்பாடாக்கியமை 43ஆம் குழு வழங்கிய பெரும் பங்களிப்பாகும். J.D.A.பெரெராவின் ஓவியப்படைப்புக்களில் முழுமையான முப்பரிமான தன்மைகளை இனங்கான முடியும் (Figure 05). இந்த 43ஆம் குழுவில் இடம்பெற்ற ஓவியர்களது படைப்புக்களின் பாணிகள் அனைத்தும் ஒரேமாதிரியானதாக வெளிப்படுத்தப்படவில்லை (Ellen Dissanayake,1986,p66). வெவ்வேறு மேலைத்தேய வியப்பாணிகளின் தாக்கத்தினை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.



Figure 03, George keyt,1956,Aaarandy, oil on canvas(Online image),Available from:https://www.artnet.com/artists/George-keyt/past-action-results



Figure 04, Pablo Picasso,1932,Girl before a mirror, oil on canvas(Online image),Available from:https:// www.themost10.com/the-10-most-famous-pablo-picasso-artworks/




Figure 05,
Perera,J,D,A., Chandreleka, oil on canvas(Online image),Available from:https:// archives.dailynews.lk/2010/02/17/art09.osp

இக் குழுவின் ஓவியப்படைப்புக்கள் பிரான்ஸ் ஓவியப்பாணியில் உருவான ஓவிய மரபுகள் ஊடாகத் தோன்றிய புதிய கலை வெளிப்பாடுகளும், இந்தியாவில் இரவீந்திரநாத் தாகூர் மற்றும் சாந்தினிகேதன் கலைப்பள்ளியின் தேசிய மரபுகளைக் கொண்ட பாணிகளும், நியூயோர்க் ஓவியப்பள்ளியின் கருத்துக்களால் உருவான அணுகுமுறைகளையும் கொண்டமைந்துள்ளன. குறிப்பாக பின்மனப்பதிவு வாதம் (Post Impressionism), கனவடிவ வாதம் (Cubism), போவிசம் (Fauvism), வெளிப்பாட்டு வாதம் (Expressionism), மற்றும் அரூப வாதம் (Abstract) முதலிய புதிய போக்குகளில் இருந்த பாணிகளை கொண்டமைந்த இலங்கை சார்ந்த நவீன ஓவியக்கலை ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தக்காலப்பகுதியில் 43ஆம்குழுவில் மிகவும் முக்கிய ஒரு நவீன ஓவியக்கலைஞராக ஜோர்ஜ் கீற் இனங்காணப்பட்டார். இவருடைய ஓவியங்கள் கீழைத்தேய உருவகருப்பொருளைக் கொண்டதாகவும் ஓவியப்பாணிகள் மேலைத்தேய மரபுகளைச் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன (Figure 03). குறிப்பாக மேலைத்தேய ஓவியர் பாப்லோ பிக்காசோவின் ஓவிய மரபுகளின் தாக்கங்களை இவருடைய பல ஓவியங்களில் இனங்காணமுடியும்(Figure 04): இதில் இரேகைகள், அலங்காரங்கள் முதலியனவற்றின் ஒற்றுமை பண்புகளைச் சுட்டிக்காட்ட முடியும்.

20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையின் ஓவியக் கலை ஒர் பன்மைத்துவ மரபினை கொண்டமைந்ததாக அடையாளப்படுத்த முடியும். காரணம் இலங்கை ஓவியக் கலைஞர்கள் இந்தியா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு சென்று கீழைத்தேய மேலைத்தேய ஓவியமரபுகளில் பயிற்சி பெற்று தேர்ச்சி அடைந்தனர். கலை தொடர்பான புதிய கருத்துக்கள்இ புதிய சிந்தனைகளஇ கலை ரீதியான தேடல்கள்இ ஊடகம் ரீதியான ஆராய்ச்சிகள் முதலியன இலங்கையில் பாரம்பரிய ஓவியக்கலை மரபுகளை உடைத்து நவீன மேலைத்தேய கலை மரபுகளை ஏற்றுக் கொள்ளும்

பன்மைத்துவமான பல ஓவியப்படைப்புக்கள் இங்கு உருவாக்கப்பட்டதனை சுட்டிக்காட்ட முடியும். ஓவியர்கள் ஒவ்வொருவரும் தமது உணர்வுகள், சிந்தனைகள், கற்பனைகள் முதலியனவற்றை ஒரே மாதிரியான பாணி களைப் பின்பற்றாமல் பல வகையான மேற்கத் தேய மரபுகளில் தமது கருப்பொருளை ஆழமாக நிறுத்தி வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு பல மேலைத்தேய பாணிகளின் செல்வாக்குகள் நிறைந்த ஓவியங்கள் பல வற்றின் கட்புல பன்மைத்துவத்தினை 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து இன்று வரை கண்டுகொள்ள முடிகின்றது.

பொதுவாக தொகுத்து நோக்கும் போது உலகமயமாதலின் தாக்கங்கள் இலங்கை ஓவியக்கலையையும் விட்டு வைக்கவில்லை என்றே கூறமுடியும். இங்கு பாரம்பரிய சாஸ்த்திர மரபுகளுக்கு உட்பட்ட ஓவியங்களை நவீன ஓவிய உலகிற்கு கொண்டு செல்வதற்கு காலனித்துவ ஆட்சி, மேலைத்தேய நாகரிகம், சமஸ்கிருதயமயமாக்கல், கட்புல பன்மைத்துவம், தகர்பு வாதக் கொள்கைகள் முதலியன பிரதானமான காரணங்களாக அமைந்துள்ளன. உள்ளூர் பாரம்பரியங்களுடன் இணைந்து நவீன, பாரம்பரிய ஓவியம் வரைதல்முறையும், முழுமையாக மேற்கத்தேய பண்புகளில் ஓவியம் வரையும் முறையும் இங்கு இனங்காணப்பட்டுள்ளது. மாறிவரும் சமகால சமூக தேவைகளுக்கேற்ப இவ் உலகமயமாதலின் தாக்கங்கள் காரணமாக புதிய படைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இதனூடாக 20ஆம் நூற்றாண்டு இலங்கை ஓவியக்கலை வரலாறானது பாரம்பரிய சாஸ்த்திர மரபுகளை இழந்து நவீன போக்குகளில் புதிய உருமாற்றம் பெற்றுள்ளதனை இங்கு அனுமானிக்க முடிகின்றது.

## Bibliography


1. கிருஷ்ணராஜா,சோ.,1997,தற்காலத்து யாழ்பாணத்து ஓவியர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
2. யேசுராசா, அ.,பத்மநாப ஐயர்,சுகுமார்,க.(தொகுப்பாசிரியர்கள்),1987,தேடலும் படைப்புலகமும், தமிழியல், யாழ்ப்பாணம்.
3. ஜெகத் வீரசிங்க, அனோலி பெரேரா, பந்து மனம்பேரி, பிரசன்ன ரணபாகு, 2005,இலங்கைக் காண்பியக் கலை 20ம் நூற்றாண்டு:இருபதாம் நூற்றாண்டின் இலங்கை ஓவிய மற்றும் சிற்பக்கலைகளின் வரலாறுகளும் அவற்றின் உள்ளூர் சர்வதேச மூலங்களும்,தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டமைப்பு வெளியீடு.

### Journals and Articles

1. Ellen Dissanayake,1986,Ceylon's 43 Group of Painters, Arts of Asia,Vol-16(02), Art of Asia Publication Ltd, Hong Kong.
2. Goonetilleke,L,p.,1968,Contemporary Painting and Sculpture in Ceylon, Ceylon Today, (February,March,April)),Government Press, Ceylon.

### Websites

1. https://www.van-dort.org
2. https://archives.sundayobserver.lk/2009/08/09/mon15.osp
3. https://www.artnet.com/artists/George-keyt/past-action-results
4. https://www.themost10.com/the-10-most-famous-pablo-picasso-artworks
5. https:// archives.dailynews.lk/2010/02/17/art09.osp
6. https:// archives.dailynews.lk/2010/02/17/art09.osp